மாலைச்சுடர்

சென்னை 28.5.2009

# ஸ்ரீஇராமச்சந்திராவில் வாய் புற்றுநோய் அறியும் இலவச முகாம்

சென்னை, மே 28:

போரூர் ஸ்ரீராமச்சந்திரா பல் மருத்துவமனையில் வாய் புற்றுநோய் அறியும் இலவச முகாம் வரும் 30-ந் தேதி நடைபெறுகிறது.

வாயில் ஏற்படும் புற்றுநோயை கண்டறியும் இலவச முகாம் ஒன்றை போரூர் ஸ்ரீராமச்சந்திரா பல் மருத்துவமனை வரும் சனிக்கிழமை (மே 30) 8 மணி முதல் நண்பகல் 1 மணி வரை நடத்துகிறது.

வாயில் நாள்பட்ட புண், சாப்பிடும் போது எரிச்சல், சதை வளர்ச்சி மற்றும் வீக்கம், நாள்பட்ட வெண்ணிறப்படை உள்ளவர்களும், புகை பிடிப்பவர்கள், புகையிலை, பான் மசாலா, பாக்கு மெல்லும் பழக்கம் உள்ளவர்களும் இலவச பரிசோதனைகளை மேற்கொள்ளலாம்.

புகையிலையில்லா உலக தினத்தை முன்னிட்டு ஸ்ரீராமச்சந்திரா பல் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையின் வாய்நோய் அறிதல் மற்றும் கதிரியக்கத்துறை இந்த இலவச முகாமை நடத்துகிறது.